பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

01 08 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள கேரள மாநிலத்துக்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
2. 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடு என்ற இலக்கை எட்டும் என்று மத்தி.திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
3. நீலகிரி, கோவை மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை மற்றும் வெள்ளம் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட ஆட்சியர்களை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.
4. மேட்டூர் அணையிலிருந்து வினாடிக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுவதால் கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.
5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்வதற்கான துப்பாக்கி சுடுதல் மற்றும் குத்துச்சண்டை பிரிவுகளில் இந்தியா இன்று பங்கேற்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள கேரள மாநிலத்துக்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் வயநாடு நிலச்சரிவு தொடர்பாக நேற்று கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்பு தீர்மானத்துக்கு பதிலளித்து பேசிய அவர், துயரமான இந்த சம்பவம் நிகழ்ந்த கேரள மாநில அரசுக்கும், மக்களுக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

2014-ஆம் ஆண்டு நாட்டில் மிக நவீன வானிலை முன்னெச்சரிக்கை சாதனம் பொருத்தப்பட்டதாகவும், இயற்கை சீற்றம் ஏற்படுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பே முன்னெச்சரிக்கை தகவல்களை தெரிவிக்கும் வகையில் அவை உள்ளதாகவும் அவர். கூறினார்.

இதனிடையே வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 240-ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன், நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இதுவரை ஆயிரத்து 592 பேர் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

வயநாடு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 82 நிவாரண முகாம்களில் எட்டாயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர், மீட்புப்படையினர் தவிர வேறு யாரும் வயநாடு பகுதிக்கு வரவேண்டாம் என திரு பினராயி விஜயன் கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே வயநாடு பகுதியில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பாக விவாதிப்பதற்காக இன்று திருவனந்தபுரத்தில் அனைத்துக்கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடு என்ற இலக்கை எட்டும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் கே வி சுப்ரமணியன் எழுதியுள்ள இண்டியா-100 என்ற புத்தகத்தை புதுதில்லியில் நேற்று வெளியிட்டு பேசிய அவர், அடிப்படை கட்டமைப்பு, வேலைவாய்ப்பு, சுற்றுலா, உற்பத்தி, தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நாடு முன்னேறி வருவதாகக் கூறினார்.

அனைத்து துறைகளிலும் சுயசார்பு என்ற நிலையை நோக்கி நாடு முன்னேறி வருவதாகவும், பொருளாதாரத்தை மேலும் ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நீலகிரி, கோவை மற்றும் காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை மற்றும் வெள்ளம் தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அம்மாவட்ட ஆட்சியர்களை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மற்றும் காவிரி ஆற்றுப் படுகையில் உள்ள மாவட்ட ஆட்சியர்களுடன் மாநில அரசின் தலைமைச் செயலர் திரு சிவதாஸ் மீனா, காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் மலைப்பகுதிகளுக்கு பொதுமக்கள் வருவதை தவிர்க்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

நிலச்சரிவால் பாதிக்கப்படக்கூடிய சாலைப்பகுதிகளை நெடுஞ்சாலை துறையினர் கண்டறிந்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

நிலச்சரிவால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் வசிக்கும் மக்களுக்கு குறுந்தகவல்கள் மூலம் முன்னெச்சரிக்கை தகவல்களை அனுப்ப வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளதால் உபரி நீர் அதிக அளவில் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில், காவிரி டெல்டா மாவட்டங்களில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு டெல்டா மாவட்ட ஆட்சியகளை திரு சிவதாஸ் மீனா கேட்டுக் கொண்டார்.

காவிரி கரையோரப் பகுதிகளில் தாழ்வான இடங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துமாறும் அவர் அறிவுறுத்தினார்.

ஆடிப்பெருக்கு மற்றும் ஆடி அமாவாசை பண்டிகைகளின்போது பொதுமக்கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே குளிக்க அனுமதிக்க வேண்டுமென்றும் ஆட்சியர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

வெள்ளநீர் செல்லும் தாழ்வான பாலங்கள் மற்றும் தரைப்பாலங்களில் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் செல்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு சிவதாஸ்மீனா அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில், அணையிலிருந்து ஒரு லட்சத்து 70 ஆயிரம் கன அடி உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.,

இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

காவிரி ஆற்றின் கரையோர மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனா.

இதனிடையே கர்நாடக அணைகளிலிருந்து அதிக அளவு தண்ணீர் காவிரியில் திறந்துவிடப்பட்டுள்ளதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து மேலும் அதிகரித்துள்ளது.

நேற்று ஒரு லட்சத்து 31 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று அதிகாலை நிலவரப்படி ஒரு லட்சத்து 70 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் ஈரோடு மாவட்டத்தில் வெள்ளப்பாதிப்பு ஏற்படும் பகுதிகள் கண்டறியப்பட்டு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் கருங்கல் பாளையம் அருகே காவிரி கரையோரப் பகுதிகளை நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*( வாய்ஸ்பைட் - முத்துசாமி ) -40---- செகண்ட்*

**[]<<<>>>[]**

ராணுவத்துக்கு அக்னிவீரர்களை தேர்வு செய்வதற்கான முகாம் இன்று கோவையில் நடைபெறுகிறது.

நேரு ஸ்டேடியத்தில் நடைபெறவுள்ள இந்த முகாமில் பங்கேற்க ஏராளமான இளைஞர்கள் குழுமியுள்ளனர்.

**[]<<<>>>[]**

நீலகிரி, கோவை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியையொட்டி உள்ள மாவட்டங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அவர் கூறியுள்ளார்,

*( சவுண்ட்பைட் - செ க ) ---34 செகண்ட்*

**[]<<<>>>[]**

சூடான் ராணுவ தலைவர் ஜெனரல் அப்தல் ஃபடா அல் புர்ஹான் ட்ரோன் தாக்குதலிலிருந்து உயிர் தப்பியுள்ளார்.

**[]<<<>>>[]**

கேரள மாநிலம் வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நிலக்கரி, சிமெண்ட், உருக்கு, மின்சாரம் உள்ளிட்ட முக்கியமான எட்டு துறைகளில் கடந்த ஜூன் மாதம் நான்கு சதவீத வளர்ச்சி காணப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியா – சீனா எல்லை விவகாரங்கள் தொடர்பான ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

அமர்நாத் பனிலிங்கத்தை தரிசிப்பதற்காக ஜம்முவிலிருந்து இன்று அதிகாலை ஆயிரத்து 295 பேர் கொண்ட குழுவினர் புறப்பட்டுச் சென்றனர்.

**[]<<<>>>[]**

உத்தரகாண்ட் மாநிலத்தில் கனமழை காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

கிருஷ்ணகிரியிலிருந்து – பெங்களூருக்கு கூடுதல் பேருந்துகளை மாநில அமைச்சர் திரு சக்கரபாணி நேற்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் எட்டரை கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திரு பிரசாந்த் நேற்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஒன்பது நாட்களாக நான்காயிரத்து 161 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் மற்றும் கட்டிடக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்வதற்கான இரண்டு போட்டிகளில் இன்று இந்தியா பங்கேற்கிறது.

ஆடவருக்கான 50 மீட்டர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்திய வீரர் **Swapnil kusale** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் அன்ஷுமான் கெய்க்வாட் நேற்று இரவு பரோடாவில் காலமானார். அவருக்கு வயது 71.

நீண்ட காலமாக ரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் லண்டன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று நாடு திரும்பிய பின்னர் பரோடாவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தார்.

அன்ஷுமான் கெய்க்வாட் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்,

கிரிக்கெட் விளையாட்டிற்கு அவர் ஆற்றியுள்ள பங்களிப்பு தொடர்ந்து நினைவு கூரபப்டும் என்று சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.